மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :—துணைத் தலைவரவர்களே "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 44/72) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 44/72) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(4) 1972-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/72).

5-30 பி.ப. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : "துணைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

இப்போது யாராவது சொத்து வாங்கினால், ஸ்டாம்ப் டியூட்டி கட்ட வேண்டுமென்பதற்காக சொத்தின் மதிப்பீட்டைக் குறைத்துப் பதிவு செய்து கொள்வார்களேயானால், நீதிபதி ரூபாய் 5,000 வரை அபராதம் விதிக்க இப்போது சட்டத்தில் வழி இருக்கிறது. இந்தப் புதிய மசோதாவில் ஸ்டாம்ப் டியூட்டியை விதிக்கப்படும் அபராதத்துடன் சேர்த்து வசூலிக்க வேண்டுமென்று திருத்தம் கொண்டு வருகிறோம். அவ்வளவு தான். எனவே இந்தச் சட்ட முன் வடிவை இந்த மேலவையும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : முன் மொழிப் பட்ட தீர்மானம் :—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

* 90 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1972 டிசம்பர் 14]

*திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : துணைத் தலைவரவர்களே, இதில் அதிக நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. அரசாங்கம் அதனுடைய வருமானத்தை இழந்துவிடக் கூடாது என்பதற்காக முன்னெச்சரிக்கையோடு இதற்கான ஏற்பாடுகளை சட்டத்தின் மூலம் தேடிக் கொள்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசு, இந்திய முத்திரைத்தாள் சட்டப்படி ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலேயும் அந்தந்தப் பகுதியிலுள்ள நிலங்கள் எக்கருக்கு எவ்வளவு பெறுமானது என்பதற்கு ரெகார்டுகளை வைத்துப் பராமரிக்கின்றது. அந்த அளவு விலையில்தான் ஸ்டாம்பு வாங்கி அந்த நிலங்களை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அனுபவத்திலே பல இடங்களிலே அரசாங்கம் நிர்ணயித்திருப்பதைவிட, பாதி விலைக்குக்கூட பேராகாத நிலங்கள் இருக்கின்றன. அதில் நாலில் ஒரு பங்குகூட விற்கக்கூடிய நிலங்கள் இருக்கின்றன—அந்த நிலங்களை, ஏழைகள், கஷ்டப்படக்கூடியவர்கள் நிர்ப்பந்தத்தின் காரணமாக, தாங்கள் அதை வைத்துப் பராமரிக்க முடியாது என்ற நிலைமையில் இருக்கும்போது, நியாயமாக விற்க முன் வந்தால், அவ்வளவு "ஸ்டாம்பு டியுட்டி" கட்டி வாங்கக்கூடிய அளவுக்குக்கூட அந்த நிலங்கள் பெறாது என்ற நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட கஷ்டங்கள் நிவர்த்திக்கப்படாமல் பல, பேர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றியும் அரசு யோசிக்க வேண்டும். இன்றைன்று இவ்வளவு விலை என்று நிர்ணயித்திருந்தும், அரசாங்கத்தினுடைய பல்வேறு அவசியங்களுக்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது, அரசாங்கம் தான் நிர்ணயித்துள்ள விலையைக் கொடுப்பதற்குக்கூட மறுக்கிறது. சாதாரணமாகச் சொல்வார்கள் "கானத்தைக் கண்டால் வாயைத் திறக்கும், கடிவாளத்தைக் கண்டால் வாயை மூடுகிறது" என்று. அதுமாதிரி அரசாங்கமும் இந்த மாதிரி சந்தர்ப்பம் அறிந்து இப்படி நடந்துகொள்ளக் கூடாது என்பதை ஆய்ந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதிலே அந்த நிலத்தை மார்க்கட் வேல்யுவிற்குக் கொடுக்க வேண்டுமென்று திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள். நிலத்தை ஆர்ஜிதம் செய்வதைப்பற்றி இந்தச் சட்டத்திலே இல்லை. அதற்கு "அக்குவிசிசன்" என்று ஒரு தனிச் சட்டம் இருக்கிறது. இதற்காக ஒரு தனி அதிகாரியைப் போட்டிருக்கிறோம். ஸ்டாம்ப் சட்டம் தவறு என்று சொல்கிறார்கள். ஸ்டாம்பு சட்டத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இப்போது பலர் ஸ்டாம்பு டியுட்டி ஏற்கெனவே கட்டவில்லை. அதனால் கட்டவேண்டிய ஸ்டாம்பு டியுட்டிகளை வசூலிக்க வேண்டுமென்றுதான் இப்போது திருத்தம் கொண்டு வரப்படுகிறது. எனவே இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 45/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 45/72) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழி கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 45/72) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 46/72).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன் வடிவு @ (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 46/72) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தலைவரவர்களே, ப்ரீஹோல்ட் என்று இந்த நாட்டிலே நிலங்கள் இருக்கின்றன. அது என்னவென்று கேட்டால், 20 ஆண்டுக் காலம் ஒருவர் இருக்கிற நிலத்தீர்வையை அரசாங்கத்திற்கு மொத்தமாகக் கொடுத்துவிட்டால், காலாகாலத்திற்கு அந்த நிலத்திற்குத் தீர்வை கட்ட வேண்டாமென்று ஒரு விதி, "போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ்"லே, இருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொண்டு பலபேர் இந்த நாட்டிலே ஏராளமான ப்ரீஹோல்ட் நிலங்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வரியே இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால்; அவைகள் ரயத்துவாரி பூமிகள்தான். அந்த நிலத்திலே பல சிக்கல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. நிலத்தை யார் யார் அனுபவித்து வருகிறார்கள்

@ 93—130-ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.